**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2023ம் ஆண்டு ஜூலை மாதம் 01 -ம் நாள் சனிக்கிழமை**
**இடைநிலை மனு எண் - 3/2021**
**இன்**
**நிறைவேற்றுதல் மனு எண். 8/2019**
**இன்**
**முதலேற்பு வழக்கு எண்: 43/2018**

---

வி.டி.கே. ராஜேந்திரன் ---மனுதாரர் /மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

1. பர்வதவர்த்தினி (இறப்பு)
2. நடராஜன்
3. கனகராஜன்
4. பரணிராஜன்
5. மகுடபதிராஜன் ---- எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 02.06.2023 அன்று என்முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த போது, மனுதாரர்/மனுதாரர்/பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வி.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்த நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 5வாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

நிறைவேற்றுதல் மனு எண். 08/2019 ன் மீதான விசாரணையையும், மேல்நடவடிக்கையையும் நிறுத்தி வைக்கக் கோரி மனு தாக்கல்.

**1. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்:**

அ) கடந்த 20.08.1997 ம் தேதி பொட்டம்பாளையம் புலஎண்.52/1ஏ2 ல் 10 செண்ட் நிலத்தை கிரையம் செய்து அனுபவித்து வந்து, பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்களின் தாயார் அவரது சொத்தில் அனுபவத்தில் இருப்பதாகக் கூறி வழக்கு தாக்கல் செய்திருந்தார். 2 சொத்துக்களின் நான்கு மால்களை ஒப்பீடு பார்த்தாலே மனுதாரரது சொத்திற்கும், எதிர்மனுதாரரது சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பது தெளிவாகும். எதிர்மனுதாரரின் தாயார் மனுதாரரின் கிரையத்தை மறைத்து உத்தரவு பெற்றுள்ளார்.. எதிர்மனுதாரரின் தாயார் பெற்றுள்ள தீர்ப்பு புலஎண்.52/1ஏ2சி யை கட்டுப்படுத்தாது.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2023.07.01 04:43:29 +0530

அசல்வழக்கில் ஒருதரப்பு உத்தரவு ஏற்பட்டுள்ளதால், மனுதாரர்தரப்பு ஆவணங்களையும் பரிசீலனை செய்த பிறகே ஒப்படைப்பு வழங்குவது அவசியமாகும். சி.பி.சி. பிரிவு 147 (1) ன் படி சொத்தின் அடையாளம் குறித்து பிரச்சனை இருப்பின், அதை நிறைவேற்றுதல் மனு நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்றும், அதன்பின்பே ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்றும் பல உச்சநீதிமன்ற, உயர்நீதிமனற் தீர்ப்புகளில் சொல்லப்பட்டுள்ளது. ஒருதலைபட்ச உத்தரவின் மூலம் மனுதாரரது சொத்தை அபகரிக்க நீதிமன்றம் ஒரு காரணமாகி விடக் கூடாது என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, நிறைவேற்றுதல் மனு எண். 08/2019 ன் மீதான விசாரணையையும், மேல்நடவடிக்கையையும் நிறுத்தி வைக்க வேண்டியது அவசியமாகிறது.

**<u>மறுப்புரையின் சுருக்கம்:</u>**

கடந்த 20.08.1997 ம் தேதி பொட்டம்பாளையம் புலஎண்.52/1ஏ2 ல் 10 செண்ட் நிலத்தை கிரையம் செய்து அனுபவித்து வந்து, பட்டா மாறுதல் ஏற்பட்டு, புலஎண். 52/1ஏ2சி என உட்பிரிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறுவது ஆட்சேபிக்கப்படுகிறது. மனுதாரரின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு வருவதாகக் கூறுவது பொய். அசல்வழக்கில் மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி ஒருதரப்பு உத்தரவிற்கு விட்டுவிட்ட பின்பே, தீர்ப்பு, தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுதல் மனு மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

முதலேற்பு வழக்கில் தீர்ப்பு தீர்ப்பாணையை ரத்து செய்ய காலதாமத மனுவுடன் மனு தாக்கல் செய்து அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஒருதரப்பு உத்தரவு ரத்தாகத நிலையில் இம்மனு தாக்கல் செய்ய இயலாது. வழக்கை காலம் கடத்தவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை அசல்வழக்கில் தெரிவித்து எழுவினா வனையப்பட்டிருக்க வேண்டும். ஒப்படைப்பு நேரத்தில் இம்மனு வீணாக காலம் கடத்த தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி என்பது மனுதாரர் கோரும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**4.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் நிறைவேற்றுதல் மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், மனுவை அனுமதிக்கக் கோரியும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில்அசல்வழக்கிலேயே ஆஜராகி, பின் ஒருதரப்பிற்கு விட்டுவிட்டு, அதன்பேரில் தீர்ப்பு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி தீர்ப்பு, தீர்ப்பாணையை ரத்து செய்ய காலதாமத மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.07.01 04:43:48 +0530

மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், அசல்வழக்கில் செய்ய வேண்டிய எதிர்வாதத்தை மனுதாரர், இம்மனுவில் செய்ய முடியாது என்றும், மனுவை தள்ளுபடி செய்யக் கோரி வாதிடப்பட்டது.

**5.** அசல் நிறைவேற்றுதல் மனுவில் எதிர்மனுதாரர் 29.11.2018ம் தேதி ஆஜராகி, மறுப்புரை தாக்கல் செய்ய 06.12.2018, 08.01.2019, 22.01.2019, 30.01.2019, 07.02.2019, 19.02.2019, 26.02.2019 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டு இறுதியாக 26.02.2019 அன்று மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுவானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, மனுதாரர்தரப்பில் 05.11.2019 அன்று வாதுரை கேட்கப்பட்டு, எதிர்மனுதாரர்தரப்பு வாதுரைக்காக 11.11.2019, 22.11.2019, 09.12.2019, 18.12.2019, 07.01.2020, 21.01.2020, 03.02.2020, 14.02.2020 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டு, பின்னிட்டு எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அறிவிப்பு அனுப்பப்பட்டு, வழக்கறிஞர் மூலம் 16.03.2020 ம் தேதி எதிர்மனுதாரர் ஆஜரான நிலையில், கொரோனா பெருந்தொற்று காரணமாக இவ்வழக்கு வாய்தா ஏற்பட்டுள்ளது.

**6.** கொரோனா பெருந்தொற்று முடிந்து, பின்னிட்டு 22.06.2020, 29.06.2020, 06.07.2020, 13.07.2020, 20.07.2020, 27.07.2020, 03.08.2020, 12.08.2020, 19.08.2020, 26.08.2020, 02.09.2020, 09.09.2020, 16.09.2020, 23.09.2020, 30.09.2020, 07.10.2020, ஆகிய தேதிகளில் எதிர்மனுதாரர்தரப்பில் எந்த எடுத்துரைப்பும் இல்லை என்பதால் வாய்தா ஏற்பட்டு, நிலுவையில் இருந்து வந்து, இறுதியாக 16.10.2020ம் தேதி எதிர்மனுதாரர் தரப்பு வாதம் முடிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பின்பு கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சார்அளவையர் உதவி தேவை என அமீனா ஒப்படைப்புக்கு உதவி கோரியதால் அம்மனு இ.ஏ.1/2021 என நிலுவையில் இருந்து கடந்த 23.08.2021ம் தேதி அனுமதியான பின்பு, அசல்வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** அசல் நிறைவேறுதல் மனுவை என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்க வேண்டும் என்ற விவரமே மனுவில் குறிப்பிடப்படாத நிலையிலும், ஏதேனும் மேல்முறையீடு தாக்கல் செய்யப் போவதாக மனுதாரர்தரப்பில் எந்த வாதமும் எடுத்துரைக்கப்படாத நிலையிலும், அசல்வழக்கில் மனுதாரர் தாக்கல் செய்த ஒருதரப்பு உத்தரவு ரத்து செய்ய காலதாமதத்தை மன்னிக்கக் கோரும் மனுவும் தள்ளுபடியாகிவிட்ட நிலையில், இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மனுதாரர் வேண்டுமென்றே அசல்வழக்கை காலம் கடத்த வேண்டி தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்து, நீதிமன்ற நடவடிக்கையை அலைகழிவு செய்து வருகிறார் என்பது தெரியவருகிறது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.07.01 04:44:01 +0530

இறுதியாக, மனுதாரர் மனு, எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ம் ஆண்டு ஜூலை மாதம் 01 -ம் நாள் சனிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.07.01 04:44:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் இல்லை

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2023.07.01 04:44:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.